**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 336/2019 |
| Name | : Mohammed Faizer |
| P.W. | : 6 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.08.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் உடுமலை அரசு மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.04.2017 ம் தேதியன்று உடுமலை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது சின்னப்பன் த/பெ.கிட்டுச்சாமி என்பவரை அவரது மகன் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அன்று காலை 08.00 மணி அளவில் சாமராயப்பட்டி பெட்ரோல் பங்க் அருகில் சின்னப்பன் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்த போது லாரி மோதி கீழே விழுந்து அடிப்பட்டதாக கூறினார். அவரை பரிசோதித்த போது மயக்க நிலையில் காணப்பட்டார். மூச்சு திணறலும் இருந்தது அவரது இதய துடிப்பும் பலவீனமாக இருந்தது. அவருடைய உடலில் காணப்பட்ட வெளிக் காயங்கள் 1. 2*1 செ.மீ அளவில் சிதைந்த காயம் வலது பக்க முழங்கைக்கு உள் பகுதி 2. வலது பக்க நெஞ்சு மற்றும் வயிற்றுப் பகுதியில் பல சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டன அவரை நான் பரிசோதனை செய்து வைத்தியம் அளித்து அவசர சிகிச்சை பிரிவில் உள் நோயாளியாக அனுமதித்தேன். **09.04.2017 தேதியிட்ட விபத்து பதிவேடு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சின்னப்பன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் அவரது பிரேதத்தை

பரிசோதனை செய்ய காவல் ஆய்வாளர் வேண்டுகோள் கடிதம் கொடுத்தன் பேரில் இறந்து போன சின்னப்பனின் பிரேதத்தை அன்றைய தினமே மதியம் 03.10 மணி அளவில் பிரேத பரிசோதனை செய்தேன். பிரேத பரிசோதனையில் இறந்து போன சின்னப்பனுக்கு 1. இரண்டு கை மற்றும் கால்களிலும் விரைப்பு தன்மை காணப்பட்டது 2. அவருடைய வலது மேல் கை உடைந்திருந்தது 3. 2 * 1 செ.மீ சிதைந்த காயம் வலது முழங்கையின் உள் பகுதியில் காணப்பட்டது 4. வலது முழங்கால் வலது பக்க நெஞ்சு மற்றும் வயிற்றுப் பகுதிகளில் பல சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது 5. அவருடைய தலையில் எந்த வித எலும்பு முறிவோ, மூளை சிதைவோ காணப்படவில்லை 6. கழுத்து எலும்பு இயல்பாக இருந்தது 7. நெஞ்சில் 3 முதல் 10 எலும்புகள் வரை முறிவு காணப்பட்டது 8. நெஞ்சு கூட்டிற்குள் 200 மி.லி உறைந்த ரத்தம் காணப்பட்டது 9. வலது பக்க நுரையீரல் சிதைந்த நிலையில் காணப்பட்டது 10. ஈரலும் சிதைந்த நிலையில் காணப்பட்டது. இறப்பின் காரணம் நுரையீரல் மற்றும் ஈரலில் ஏற்பட்ட சிதைந்த காயத்தினால் உண்டான ரத்த இழப்பு மற்றும் அதிர்ச்சி ஆகும். **இறந்து போன சின்னப்பனின் பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இறந்து போன நபர் மது போதையில் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்று லாரி மீது மோதினால் இந்த காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது. பிரேத பரிசோதனை அறிக்கையில் இறந்து போன நபரின் வயிற்றில் உள்ள மஞ்சள் திரவம் மதுவாக இருக்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்